1994 மார்ச் 25]

உயர் நீதிமன்றத்தைக் கலந்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 82, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

82–

உசிலம்பட்டி அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்தல்

*17544–**திருமதி இரா. பாண்டியம்மாள் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையை கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின் பெயரால் வீர சபதம் ஏற்கும் இந்த நன்னாளில், புரட்சித் தலைவியின் வழி வந்த அமைச்சர் அவர்கள் இதை ஆம் என்று சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உசிலம்பட்டி பின்தங்கிய பகுதி. பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில் இருக்கிற மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருக்கிறது. ஆகையால், உசிலம்பட்டி வளர்கின்ற ஒரு நகரமாக இருப்பதாலும், உசிலம்பட்டி மக்களும், பக்கத்திலுள்ள சேடப்பட்டி தொகுதியிலுள்ள மக்களும் அங்கே அதிகப்படியாக வருகின்ற காரணத்தினால் அங்கே பழமையான அந்த மருத்துவமனை மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், அங்கு படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதாலும், டாக்டர்கள் குறைவாக இருக்கின்றார்கள்.. எலக்ட்ரீசியன் கூட அங்கு இல்லையென்று நான் சென்றபொழுது சொன்னார்கள். ஆகையால், புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் அமைச்சர் அவர்கள் இதைத் தீர்க்க, மறுபரிசீலனை செய்து, மீண்டும் இதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓரளவு வசதிகள் அங்கே இருக்கிற காரணத்தினால் தான் அப்படிச் சொன்னேன். இருந்தாலும்கூட, அங்கே 111 படுக்கைகள் இருக்கின்றன. அங்கே கண் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, சித்தா, இப்படி பல பிரிவுகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆண், பெண் இவர்களுக்கு தனித் தனியாக அறுவை அரங்கம் இருக்கிறது. பொது அறுவை அரங்கம் இருக்கிறது. இப்படி பல்வேறு வசதிகள் அங்கே இருக்கிறது. இருந்தாலும், இப்பொழுது சமீபத்திலே, ஒரு 6 படுக்கைகள் கொண்ட குடும்ப நல அறுவை அரங்கம் அதற்காக கட்டப்பட்டு, அதற்கு 6 படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 50 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவு அங்கே ஏற்படுத்த இப்போது ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, குழந்தைகளுக்காக 6 படுக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றங்களெல்லாம் சமீபத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே மருத்துவர்கள் 11 பேர்கள் இருக்கிறார்கள். ஏறத்தாழ நார்ம்ஸ்படி அங்கே இருக்கிறது. செவிலியர்கள் 22 பேர்கள் இருக்கிறார்கள். மற்ற அமைச்சுப் பணியாளர்கள் 5 பேர்கள்; டெக்னிஷியன்ஸ் 23 பேர்கள்; மற்றவர்கள் 24 பேர்கள் -. மொத்தம் 85 பேர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். எனவே தேவையான அளவுக்கு இருக்கிறார்கள். கண் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற 50 படுக்கைகள் வந்தால் ஓரளவுக்கு நீங்கள் திருப்தி அடைவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 10.05

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சுற்றுச் சுவர்கள் எல்லாம் பழுதடைந்திருக்கிறது. அலுவலகம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் பராமரித்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையை மனதிலே வைத்து, சுற்றுச் சுவர்கள் கட்டுவதெல்லாம் கொஞ்சம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. கட்டிடங்கள் கட்டுவது, இருக்கிற கட்டிடங்களைப் பழுது பார்ப்பது போன்ற முக்கியமான பணிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கே ஏற்கெனவே சுற்றுச் சுவர் இருக்கிறது. அது பழுதடைந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சேடப்பட்டி தொகுதியிலிருந்துகூட நோயாளிகள் வருவதாகச்

1994 மார்ச் 25]

சொன்னார்கள் -- மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே சொல்லி அங்கே இருக்கின்ற யாரையாவது வைத்து அந்தக் கட்டிடத்தின், சுற்றுச் சுவரை ஒழுங்குபடுத்திக் கொடுத்தால் அரசுக்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே கஞ்சிக்கு வழியில்லாதவர்கள்தான் பெரும்பகுதி இருக்கிறார்கள். எனவே அங்கே எங்கே கட்டிடம் கட்டிக் கொடுக்க ஆள் இருக்கிறார்கள்? நீங்கள் செய்தால் உண்டு. திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக கண் சிகிச்சைப் பிரிவு ஒன்று 40 இலட்சம் ரூபாயில் வர இருப்பதாக பத்திரிகையில் செய்தி பார்த்தேன். எப்போது அதை நடைமுறைப்படுத்துவார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக அது அமுலாக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண் 83, திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

83–

காமராஜர் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந்துகள் வழங்குதல்

**19372–*திரு. *சஞ்சய் ராமசாமி :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விருதுநகரில் உள்ள காமராஜர் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குப் போதிய உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விருதுநகரிலுள்ள காமராஜர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந்துகள் போதிய அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது.